# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.

தொலைபேசி : 044- 22201337

மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in


தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்,
சென்னை- 600 032.

முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

**முறையீட்டு மனு எண். 183/நகராட்சி/2018**

**நாள் : 11/01/2019**

**திரு ப. குபேந்திரன்,**
**கீழ் அயனம்பாக்கம்,**
**சென்னை – 600 095.** – **முறையீட்டு மனுதாரர்**

**நகராட்சி ஆணையர்/ சுகாதார ஆய்வாளர்,**
**திருவேற்காடு நகராட்சி, திருவேற்காடு.**

– **எதிர் மனுதாரர்**

சென்னை, கீழ் அயனம்பாக்கம், அம்பேத்கார் தெரு, 19/12, கதவு எண்ணிட்ட முகவரியில் வசிக்கும் திரு ப. குபேந்திரன் அவர்களின் 16.08.2018 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு 183/2018 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் முறையீடு சம்பந்தமாக மனுதாரர் மற்றும் நகராட்சி ஆணையரிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டு அவர்கள் அளித்த வாக்குமூலம் மற்றும் நகராட்சி ஆணையரின் அறிக்கை ஆகியவை பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

சென்னை, கீழ் அயனம்பாக்கம், அம்பேத்கார் தெரு, 19/12, கதவு எண்ணிட்ட முகவரியில் வசிக்கும் திரு ப. குபேந்திரன் என்பவர் திருவேற்காடு நகராட்சிக்குட்பட்ட 4–வது வார்டில் தனது இல்லத்திற்கு அருகில் நகராட்சி அனுமதி பெறாமல் இயந்திரங்களை பழுதுபார்க்கும் தொழிற்கூடம் ஒன்று இரவிலும் பகலிலும் செயல்பட்டு வருகிறதென்றும், அதனால் ஒலி மாசு ஏற்பட்டு தானும் தனது குடும்பத்தாரும் நித்திரை கெட்டு மன உளைச்சலுக்கு ஆளாகி உள்ளதாக தனது முறையீட்டு மனுவில் தெரிவித்துள்ளார். இது குறித்து நகராட்சி அலுவலர்களுக்கு முறையீடு செய்தும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படாத நிலையில் இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்து அத்தொழிற்கூடத்தை அகற்ற நடவடிக்கை எடுக்கக் கோரியுள்ளார்.

2. முறையீட்டு மனுதாரரிடம் 10.10.2018 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு வாக்குமூலம் பெறப்பட்டது. நகராட்சி அனுமதி பெறாமல் திருவாளர்கள் ஜெ.வினோத்குமார் மற்றும் பி. ஜெயசந்திரன் ஆகிய இருவரும் பொது நிலத்தை சட்ட விரோதமாக ஆக்கிரமிப்பு செய்துள்ளனர் என்றும் அந்நிலத்தில் நகராட்சி அனுமதியின்றி இயந்திரங்கள் பழுதுபார்க்கும் தொழிற்கூடம் இரவு பகலாக இயங்குவதால் ஒலி மாசு ஏற்பட்டு நித்திரை கெடுகிறது என்றும் அதனால் மன உளைச்சலுக்கு ஆளாகி மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று வருவதாகவும் விசாரணையின் போது தெரிவித்தார். எனவே, சட்டவிரோதமாக செயல்படும் இயந்திரங்களை பழுது பார்க்கும் தொழிற்கூடத்தின் செயல்பாட்டினை தடுத்து நிறுத்துமாறும் கோரினார்.

3. முறையீட்டு மனுதாரரின் முறையீடு குறித்து நகராட்சி ஆணையரின் அறிக்கையும் பெறப்பட்டது. முறையீட்டு மனுதாரர் தெரிவித்துள்ள இடத்தினை தல ஆய்வு செய்ததில் மேற்குறிப்பிட்ட இடம் மனுதாரரின் வீட்டிற்கு மேற்புறத்தில் அமைந்துள்ளது என்றும், அவ்விடத்தில் சுற்றுச் சுவர் கட்டப்பட்டு முன்புறம் வாயில் கதவு அமைக்கப்பட்டுள்ளதென்றும் தெரிவித்துள்ளார். அவ்விடத்தில் A.C. ஷீட் கூரை ஒன்று அமைக்கப்பட்டு பேருந்து நிறுத்தப்பட்டுள்ளதென்றும் தெரிவித்துள்ளார். மேற்படி A.C. ஷீட் கூரை அமைக்கப்பட்டுள்ள இடத்தில் பணிகள் ஏதும் நடைபெறவில்லை என்று அக்கம் பக்கத்து நபர்களிடம் விசாரணை மேற்கொண்டபோது தெரிவிக்கப்பட்டதென்றும் குறிப்பிட்டுள்ளார். மேலும், முறையீட்டு மனுதாரரின் குமாரத்தி செல்வி சசிரேகா அவர்களிடம் விசாரணை மேற்கொண்டதில் பொது காலி மனையில் A.C. ஷீட் கூரை அமைத்துள்ள நபர்கள் தங்களின் நெருங்கிய உறவினர்கள் என்று தெரிவித்தாகவும் நகராட்சி ஆணையர் குறிப்பிட்டுள்ளார். மேலும், கள அலுவலர்கள் களப்பணிக்குச் செல்லும் பொழுது மேற்குறிப்பிட்ட இடத்தினை கண்காணிக்கவும் அறிவுறுத்தியுள்ளதாகவும் தெரிவித்தார். நகராட்சி ஆணையரிடம் 07.01.2019 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டது. விசாரணையின் போதும் மேற்குறிப்பிட்ட விவரங்களை உறுதி செய்து வாக்குமூலம் அளித்தார்.

4. A.C. ஷீட் கூரை அமைக்கப்பட்டுள்ள இடம் அரசு புறம்போக்கு நிலம் என நகராட்சி ஆணையரும் உறுதி செய்துள்ளார். அம்மனையில் முறையீட்டு மனுதாரரின் நெருங்கிய உறவினர்கள் அக்கூரையை அமைத்துள்ளதாக முறையீட்டு மனுதாரரின் குமாரத்தியும் உறுதி செய்துள்ளார். இந்நேர்வு சம்பந்தப்பட்ட இடம் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு சுற்றுச் சுவர் கட்டப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், அம்மனை நிலத்தின் வகைப்பாட்டினை கண்டறிந்து அந்நிலம் நகராட்சிக்கல்லாமல் வேறு துறைக்குச் சொந்தமானதாக இருந்தால் அத்துறையினருக்குத் தெரிவித்து ஆக்கிரமிப்பினை அகற்ற நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறது. அம்மனை நிலம் நகராட்சிக்கு சொந்தமானதாக இருந்தால் சுற்றுச் சுவர் மற்றும் கொட்டில் ஆக்கிரமிப்புகளை அகற்றவும் திருவேற்காடு நகராட்சி ஆணையருக்கு அறிவுறுத்தி ஆணையிடப்படுகிறது. மேலும், நகராட்சி ஆணையர் தனது வாக்குமூலத்தில் சம்பந்தப்பட்ட நிறுவனம் நகராட்சியிடம் உரிமம் ஏதும் பெறப்பட வில்லையெனவும் சொத்துவரி, தொழில்வரி ஏதும் விதிக்கப்படவில்லை எனவும் குறிப்பிட்டார். எனவே, உரிய விதிகளின்படி உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தி ஆணையிடப்படுகிறது.

2019–ஆம் ஆண்டு, ஜனவரி திங்கள், 11–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிட்டு, அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்

1. திரு ப. குபேந்திரன்,
எண்.19/12, அம்பேத்கார் தெரு,
கீழ் அயனம்பாக்கம்,
சென்னை – 600 095.

2. நகராட்சி ஆணையர்,
திருவேற்காடு நகராட்சி,
திருவேற்காடு,
சென்னை – 600 077.

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்
பிரிவு அலுவலர் (நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு – 3
இ.கோ. / உதிரி